சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண். 107/2021</u>

10.09.2025

வா.சா.2 திருமதி.ஹேமா, க/பெ. ராஜா

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதி அசோகன் தனது தகப்பனார்பெயரில் அன்பின் காரணமாக சொத்துக்களை வாங்கினார். எனது தகப்பனார் அன்பழகன் பெயரில் அந்த சொத்துக்களை எழுதி வைத்துள்ளார். அதனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசோகன் எனது தகப்பனார் பெயரில் சொத்துக்கள் வாங்கிய போது பேசப்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. அன்பழகன் பெயரில் எனது தகப்பனார் சொத்தை எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். எனது தகப்பனார் சொத்தை எழுதிவைத்த விவரம் அசோகனுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசோகனுக்கு எப்போது தெரியும் என்றால் எங்கள் வீட்டிற்கு நீதிமன்றத்திலிருந்து நோட்டீஸ் கிடைத்த பின்னிட்டு தான் தெரியவந்தது. எத்தனை வருடங்களுக்கு முன்பு அறிவிப்பு வந்தது என்றால் 15 வருடம் இருக்கும். அப்போது என் அப்பா உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார். நான் தற்போது வரை அசோகன் வீட்டில் குடியிருந்து வருகிறேனா என்றால் ஆமாம். அசோகனும் எங்களுடன் தான் வசித்து வருகிறார். எனது தகப்பனார் எங்களுடன் தான் வசித்து வந்தார். அன்பழகன் சொத்தை எழுதிவாங்கிய பின்னிட்டு எருக்காட்டுரில் உள்ள எங்கள் பழைய வீட்டிற்கு சென்றுவிட்டார். எனது தகப்பனார் இருந்த வீட்டில் தற்போது அன்பழகன் வசித்து வருகிறார் என்றால் இல்லை. அன்பழகன் பழைய வீட்டிலிருந்த முருகேசனையும் அவரது குடும்பத்தாரையும் போலீசார் விரட்டிவிட்டார். பழைய வீட்டை எனது தகப்பனார் அன்பழகன் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. முருகேசனிடமிருந்து அன்பழகன் வாங்கியுள்ளார். தாவா சொத்து சம்பந்தமாக காவல்நிலையத்தில் கொடுத்த புகார் நிலுவையில் உள்ளது என்றால் அன்பழகன் கொடுத்த வழக்கு நிலுவையில் உள்ளது. முதல்விசாரணை வாக்குமூலத்தை நான் தான் தயார் செய்தேன். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை பிராதில் என் அண்ணன்

சொல்லியுள்ளாரா என்றால் அவர் என்ன கொடுத்துள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் உயிருடன் இருந்தவரை அவரை ஏமாற்றி கிரயமோ செட்டில்மெண்டோ எழுதிவாங்கியதாக சொல்லி என் தகப்பனார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். முருகேசன் அன்பழகன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார் அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு எண் மற்றும் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் முருகேசன் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லவில்லை என்றாலும் எனது சகோதரர் அசோகன் சொல்ல விடுபட்ட விவரங்களை முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அசோகன் எனது தகப்பனார் உயிருடன் இருந்தவரை சொத்துக்கள் தகப்பனார் பெயரில் பெயரளவிற்கு வாங்கப்பட்டதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. முதல்விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து விவரங்களும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாகவும், பிரதிவாதி மீதுள்ள விரோதத்தின் காரணமாகவும் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதால் பிரதிவாதிக்கு ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.